திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலங்களில் மீனவர்களுக்கு அளிப்பதைப்போல, ஒரு தொகையைப் பெற்று, மாநில அரசு ஒரு தொகையும், மத்திய அரசு ஒரு தொகையும் சேர்த்து அளித்தால் பீடித் தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும். ஏழைகளாக இருக்கும் இவர்களுக்கு, அரிஜனங்களுக்கு, மீனவர்களுக்கு, நெசவாளர்களுக்கு, முடி திருத்துபவர்களுக்கு, சலவைத் தொழிலாளர்களுக்கு, இருளர்களுக்கு, நரிக்குறவர்களுக்கு நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே குரூப் ஹவுஸ் கட்டிக் கொடுக்கிறார்கள். அதைப்போல இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கும் குரூப் ஹவுஸ் கட்டுகின்ற ஒரு திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்குத் தமிழகத்தில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஏறத்தாழ *1000* வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிலும், குறிப்பாக மேலப்பாளையம் கிராமத்தில் *500* வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த வீட்டின் மதிப்பு ரூபாய் *22000* ஆகும். மத்திய அரசு *9,000* ரூபாய் உதவித்தொகையும், மாநில அரசு ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக *13,000* ரூபாய் கடனாகவும் அளிக்கப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *57*, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

57—

நாகப்பட்டினத்தில் சோடியம் மற்றும் மெர்க்குரி விளக்குகள்

10197*–திரு. ஆர். கோடிமாரி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரான நாகப்பட்டினத்திற்கு சோடியம் மற்றும் மெர்க்குரி விளக்குகளைப் பொருத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

நகராட்சி நிதியில் சோடியம் மற்றும் மெர்க்குரி விளக்குகள் போட திட்டம் ஏதுமில்லை.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் வணங்கும் தெய்வம் டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகுதான் நாகப்பட்டினத்தில் 333 சோடியம் லைட் போடப்பட்டுள்ளது. டியூப் லைட் 1791 போடப்பட்டுள்ளது. மேலும், நாகப்பட்டினம், கடலோரப் பகுதியாக இருப்பதால் டியூப் லைட் உப்புக் காற்றுக்குச் சரியாக அமைவது இல்லை. ஆகவே, மேலும் சோடியம் லைட் 800 ஆக உயர்த்தித் தர ஆவன செய்யுமா என அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிகளினுடைய நிதி நிலையைக் கருத்திலே கொண்டுதான்--சோடியம் ஆவி விளக்கு அமைப்பதற்கான தடையாணை தற்போது அமலிலே இருக்கிறது. கூடிய விரைவிலே தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைப்படி நிதிநிலைக்கேற்ப சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்குண்டான அந்தத் தடையாணையை நிவர்த்தி செய்து, இதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாகப்பட்டினம் மூன்று பெரிய ஸ்தலங்களைக் கொண்ட ஊராக அமைந்திருக்கிறது. 1. வேளாங்கண்ணி; 2. நாகூர் தர்க்கா; 3. சிங்காரவேலர்: இதுபோன்ற ஸ்தலங்கள் அமைந்திருப்பதனால் நாகப்பட்டினத்திற்கு வருகைதரும் பிரயாணிகள் அதிகமாக இருப்பதனால் அதற்கேற்றவாறு இந்த விளக்குகளைக் கூட்டித்தர வாய்ப்பிருக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே நகராட்சிகளுடைய நிதி நிலையைக் கருத்திற்கொண்டு அங்கே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்குச் சோடியம் ஆவி விளக்குகளைப் பொறுத்தவரை நகராட்சி நிதியிலிருந்தே போடுவதற்குத் தடையாணை

இருந்து வருகிறது. தற்பொழுது அரசு அந்தத் தடையாணையை நீக்குவதற்காக நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆகவே, தடையாணை நீக்கப்பட்ட பின்பு இதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 58, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

58—

காவல்கிணற்றில் பேருந்து நிலையம் அமைத்தல்

**25234–திருமதி ரமணி நல்லதம்பி:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு என்ற ஊரில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் கிணறு என்கின்ற அந்த ஊர் ஓரளவு அதிகமான ஜனத் தொகை கொண்ட ஊர் என்றே சொல்லலாம். அதுமாத்திரமல்ல; அந்த காவல்கிணறு என்ற ஊரிலே பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் காய்கறிகளைக் கொண்டு வந்து குவித்து, அங்கே லாரிகளெல்லாம் ரோட்டிலே தாறுமாறாக நிறுத்தி அந்தப் பொருட்களை மற்ற இடங்களுக்கு ஏற்றிச் சென்று விற்பனை செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. சுதந்திரமடைந்து இவ்வளவு ஆண்டுகளாகியும்கூட அந்தக் காவல் கிணறு என்கின்ற ஊருக்கு மாத்திரமல்ல; இராதாபுரம் தொகுதியின் தலைநகரான, தாலுக்கா தலைநகரான இராதாபுரத்திற்கும் பஸ் ஸ்டான்ட் இல்லை. ஆகவே, இவைகளைக் கருத்திற்கொண்டு மறுபரிசீலனை செய்து எப்படியாவது பஸ் நிலையம் இல்லாத அந்தக் காவல்கிணறுக்கு ஒரு பஸ் நிலையத்தை ஏற்படுத்தித் தர அமைச்சர் முன்வருவாரா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.